## 10. வியாபார வரி (குறித்த சிலதொழில்கள் மீதான)

டிஜிட்டல் தரவுகளைப் பயன்படுத்தல்

இலத்திரனியல் செய்திகள் /கொடுக்கல் வாங்கல் (SMS /WhatsApp /e-mail)

இனங்காணப்பட்ட வியாபார வரியின் கீழ் வரும் இடங்கள் தொடர்பாக ஏட்டில் குறிப்பிடப்படும் நபர்களுக்கு வியாபார வரி அறிவித்தலை மின்னஞ்சல் செய்தி ஊடாக அல்லது நேரடியாக கையளித்தல்

பொறுப்பு: வருமானப் பரிசோதகர்

↓

இணையத்தள வசதிகள் ஊடாக வரியைச் செலுத்த முடியுமான சந்தர்ப்பத்தில் நிகழ்நிலை முறைமை ஊடாகவும் அவ்வாறான வசதி இல்லாத சந்தர்ப்பத்தில் முன் அலுவலகத்திலும் வரியைச் செலுத்துதல்

பொறுப்பு: வரிக்குரிய நபர்

↓

வியாபார வரியை அறவிட்டு பற்றுச்சீட்டை வழங்குதல்

பொறுப்பு: முன் அலுவலக உத்தியோகத்தர்

↓

அறவிட்ட வரி தொடர்பான தகவல்களை வியாபார வரியின் கீழ் வரும் இடங்கள் பற்றிய ஏட்டிலும் வியாபார வரி ஏட்டிலும் பதிவு செய்தல்

பொறுப்பு: முன் அலுவலக உத்தியோகத்தர்

### வியாபார வரியை செலுத்தாத சந்தர்ப்பத்தில் பின்பற்ற வேண்டிய ஒழுங்குமுறை

உரிய திகதியில் வரியை செலுத்துவதற்குத் தவறியுள்ள நபர்களுக்கு கணக்காளரின்/ செயலாளரின் கையொப்பத்துடன் நினைவூட்டலை அனுப்புதல்

பொறுப்பு: விடய உத்தியோகத்தர்

↓

நினைவூட்டலில் குறிப்பிட்ட திகதியிலும் வரியைச் செலுத்தாத நபர்கள் சம்பந்தமாக நீதவானுக்கு விடுக்கும் கோரிக்கையை ஆணையாளரின் / செயலாளரின் கையொப்பத்தினைப் பெற்றுக்கொண்டு வருமானப் பரிசோதகருக்கு கையளித்தல்

பொறுப்பு: விடய உத்தியோகத்தர்

அடுத்த பக்கத்திற்கு

முன்னைய பக்கத்திலிருந்து

நீதவானுக்கு விடுக்கப்படும் கோரிக்கையை நீதிமன்றத்தில் முன்வைத்து அது பற்றிய தரவுகளை வழக்கு ஏட்டில் பதிவு செய்தல்

பொறுப்பு: வருமானப் பரிசோதகர்

↓

வழக்குத் திகதியில் நீதிமன்றத்தில் முன்னிலையாதல்

பொறுப்பு: வருமானப் பரிசோதகர்

↓

அறவிட வேண்டிய வியாபார வரியை தண்டப்பணமாகக் கருதி செலுத்துவதற்கு கட்டளையிடுதல்

பொறுப்பு: நீதவான்

↓

வியாபார வரியை அறவிட்டு பற்றுச்சீட்டை வழங்குதல்

பொறுப்பு: வருமானப் பரிசோதகர்

↓

வியாபார வரியை அறவிடுவது பற்றிய தகவல்களை விடயத்திற்குப் பொறுப்பான உத்தியோகத்தருக்கு அறிக்கையிட்டு நீதிமன்றத் தீர்ப்பை வழக்கு ஏட்டில் பதிவு செய்தல்

பொறுப்பு: வருமானப் பரிசோதகர்

↓

வியாபார வரியை அறவிடுவது தொடர்பான தகவல்களை கைத்தொழில் வரியின் கீழ் வரும் இடங்கள் பற்றிய ஏட்டிலும் வியாபார வரி ஏட்டிலும் பதிவு செய்தல்

பொறுப்பு: விடய உத்தியோகத்தர்

செயலாற்றுகை சுட்டி



## 10. வியாபார வரி (குறித்த சில தொழில்கள் மீதான)

### 1. அறிமுகம்

(அ) வரியொன்றை விதிப்பதற்கு அரசியலமைப்பின் 148 ஆவது உறுப்புரை மூலம் பாராளுமன்றத்திற்கு கிடைத்துள்ள அதிகாரங்களை, சட்டமொன்று ஊடாக வேறு ஏதேனும் அதிகாரசபைக்கு ஒப்படைப்பதற்குப் பாராளுமன்றத்திற்கு கிடைத்துள்ள அதிகாரத்தின் கீழ், உள்ளூராட்சி நிறுவன அதிகாரப் பிரதேசமொன்றினுள் ஏதேனும் வியாபாரம் ஒன்றை நடாத்திச் செல்கின்ற ஒருவரிடமிருந்து வரியொன்றை விதித்து அறவிடுவதற்கு, 252 ஆவது அதிகாரமான மாநகர சபைகள் கட்டளைச் சட்டம் மூலம் மாநகர சபைகளுக்கும், 255 ஆவது அதிகாரமான நகர சபைகள் கட்டளைச் சட்டம் மூலம் நகர சபைகளுக்கும், 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டம் மூலம் பிரதேச சபைகளுக்கும் அதிகாரங்கள் ஒப்படைக்கப்பட்டுள்ளன. இதன் கீழ் அந்த உள்ளூராட்சி நிறுவனங்களினால் அதன் அதிகாரப் பிரதேசத்தினுள் நடாத்திச் செல்லப்படுகின்ற வியாபாரங்கள் மீது வரியொன்றை விதித்து அறவிட முடியும்.

(ஆ) கைத்தொழில் வரியின் கீழ் வரும் இடமல்லாத இடமொன்றாக உள்ள சந்தர்ப்பத்தில் மற்றும் ஏதேனும் சேவைகளை வழங்கும் பணியைச் செய்து வருகின்ற இடத்திற்கு அனுமதிப்பத்திரமொன்றைப் பெற்றுக்கொள்வதற்கு துணைவிதியொன்று ஊடாக கட்டளையிடப்படாத சந்தர்ப்பத்தில், அந்த வியாபாரம் இந்த வரியின் கீழ் உள்ளடங்கும்.

### 2. சட்டரீதியான அதிகாரம்

(அ) 252 ஆம் அதிகாரமான மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 247, பிரிவின் (1) ஆம் பந்தி

(ஆ) 255 ஆம் அதிகாரமான நகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 165ஆ பிரிவின் (1) ஆம் பந்தி மற்றும்

(இ) 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 152 ஆவது பிரிவின் (1) ஆம் பந்தி.

### 3. தகமைகள்

கைத்தொழில் வரியின் கீழ் வரும் இடமல்லாத இடமொன்றாக உள்ள சந்தர்ப்பத்தில் மற்றும் துணை விதியொன்றின் ஏற்பாடுகளின் கீழ் அனுமதிப்பத்திரமொன்றைப் பெற்றுக்கொள்வதற்கு கட்டளையிடப்படாத மற்றும் சேவைகளை வழங்கும் பணியில் ஈடுபட்டுள்ள ஒரு நபர் இந்த வரியைச் செலுத்த வேண்டும்.

## 4. கட்டணம்

முந்தைய ஆண்டுக்கான வியாபாரங்களின் பெறுதல்களின் அடிப்படையில் வரி கணக்கிடப்படும். வரி கீழே குறிப்பிடப்பட்ட தொகையை விட விஞ்சகூடாது. மாநகர சபை, நகரசபை, பிரதேசசபை குறித்த சில தொழில்கள் மீதான வரி பின்வருமாறு வரையறுக்கப்பட்டுள்ளது.

| ஆண்டிற்கான வியாபார பெறுகைகள் | வியாபார வரி (ரூபா) |
|---|---|
| ரூபா 6,000.00 இனை மேற்படாதவிடத்து | இல்லை |
| ரூ.6,000.00க்கு மேற்பட்டு ரூ.12,000.00க்கு மேற்படாதவிடத்து | 90.00 |
| ரூ.12,000.00க்கு மேற்பட்டு ரூ.18,750.00க்கு மேற்படாதவிடத்து | 180.00 |
| ரூ.18,750.00க்கு மேற்பட்டு ரூ.75,000.00க்கு மேற்படாதவிடத்து | 360.00 |
| ரூ.75,000.00க்கு மேற்பட்டு ரூ.150,000.00க்கு மேற்படாதவிடத்து | 1,200.00 |
| ரூ.150,000.00க்கு மேற்படுமிடத்து | 3,000.00 |

## 5. சமர்ப்பிக்க வேண்டிய ஆவணங்கள்

இதன் இணைப்பிலுள்ள மாதிரிப் படிவத்திற்கு ஏற்ப, ஆணையாளர்/ செயலாளரினால் வழங்கப்பட்ட வியாபாரம் தொடர்பான வரி அறிவித்தல்.

குறிப்பு: இந்த ஆவணத்தை எவரேனும் நபருக்கு சமர்ப்பிக்க முடியாத சந்தர்ப்பத்தில், மேற்குறிப்பிடப்பட்டவாறான வியாபாரமொன்று தன்னால் நடாத்திச் செல்லப்படுவதாகவும், தான் அந்தப் பணியைச் செய்கின்ற இடத்தின் முகவரி யாது என்பதையும் சபையின் முன் அலுவலக உத்தியோகத்தருக்கு அறிவிப்பதன் மூலம் இந்த வரியைச் செலுத்தலாம்.

## 6. செயல்முறை

| செயல்முறை | கால கட்டம் | அதிகாரம் |
|---|---|---|
| வியாபார வரி விதிப்பது தொடர்பில் உள்ளூராட்சி சபை தீர்மானம் எட்டுதல் | அக்டோபரில் உள்ளூராட்சி மன்றக் சபைக்கூட்டம் | மாநகர முதல்வர் தவிசாளர் |
| சபையின் தீர்மானத்தை வர்த்தமானப்பத்திரிகையில் வெளியிடுதல் | டிசம்பருக்கு முன் | மாநகர முதல்வர் தவிசாளர் |
| அனைத்து வியாபார நிலையங்களையும் அடையாளப்படுத்தி வியாபாரங்களின் பட்டியலைத் தயாரித்தல் | மார்ச் 31 க்கு முன் | வருமானப்பரிசோதகர் நியமிக்கப்பட்ட உத்தியோகத்தர் |
| உள்ளூராட்சி மன்ற நிர்வாக எல்லைக்குட்பட்ட பிரதேசத்தில் அனைத்து வியாபார இடங்களுக்கும் சபையின் தீர்மானத்தினை அறிவித்தலும் | மார்ச் 31 க்கு முன் | மாநகர ஆணையாளர் செயலாளர் |

| | | |
|---|---|---|
| விண்ணப்பப் படிவத்தை இலவசமாக வழங்குதல் | | வருமானப்பரிசோதகா் |
| பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவங்களின் சேகரித்தல் | மார்ச் 31 க்கு முன் | வருமானப்பரிசோதகா் / நியமிக்கப்பட்ட உத்தியோகத்தா் |
| வியாபார வரி கட்டணம் வசூலிக்கப்படுதல் | உரிமையாளருக்கு அறிவிப்பு வெளியிடப்பட்ட 7 நாட்களுக்குள் | நியமிக்கப்பட்ட உத்தியோகத்தா் |
| வரி அறவீடு தொடர்பான பதிவேட்டினை பேணுதல் | வரி சேகரிக்கப்பட்ட 10 நாட்களுக்குள் | விடய உத்தியோகத்தா் மாநகர முதல்வா் தவிசாளா் |

## 7. வியாபார வரியை செலுத்தாத சந்தர்ப்பத்தில் சட்டரீதியான விளைவுகள்

| ஒழுங்குமுறை | காலப்பகுதி | அதிகாரம் |
|---|---|---|
| உரிய திகதியில் வரியை செலுத்துவதற்குத் தவறியுள்ள நபர்களுக்கு கணக்காளரின்/ செயலாளரின் கையொப்பத்துடன் வரியைச் செலுத்த வேண்டிய நபருக்கு நினைவூட்டலை அனுப்புதல் | வரியைச் செலுத்த வேண்டிய திகதி கழிந்தவுடன் | விடயத்துக்குப் பொறுப்பான உத்தியோகத்தர் |
| நினைவூட்டலில் குறிப்பிட்ட திகதியிலும் வரியைச் செலுத்தாத நபர்கள் சம்பந்தமாக நீதவானுக்கு விடுக்கும் கோரிக்கையை நகர ஆணையாளரின்/ செயலாளரின் கையொப்பத்தினைப் பெற்றுக்கொண்டு வருமானப் பரிசோதகருக்கு கையளித்தல் | நினைவூட்டலில் குறிப்பிடப்பட்ட திகதி கழிந்தவுடன் | விடயத்துக்குப் பொறுப்பான உத்தியோகத்தர் |
| நீதவானுக்கு விடுக்கப்படும் கோரிக்கையை நீதிமன்றத்தில் முன்வைத்து தரவுகளை வழக்கு ஏட்டில் பதிவு செய்தல் | கையொப்பமிடப்பட்ட கோரிக்கை தனக்கு கிடைத்தவுடன் | வருமானப் பரிசோதகர் |
| நீதிமன்றத்தில் முன்னிலையாதல் | நீதிமன்றப் பதிவாளரினால் அறிவிக்கப்படும் திகதியில் | வருமானப் பரிசோதகர் |

| ஒழுங்குமுறை | காலப்பகுதி | அதிகாரம் |
|---|---|---|
| அறவிட வேண்டிய வரியை தண்டப்பணமாக அறவிடுவதற்கு கட்டளையிடுதல் | | நீதவான் |
| வரியை அறவிட்டு பற்றுச்சீட்டை வழங்குதல் | நீதிமன்றத் தீர்ப்பு வழங்கப்பட்டவுடன் | வருமானப் பரிசோதகரின் மேற்பார்வையின் கீழ் குறித்துரைக்கப்பட்ட உத்தியோகத்தர் |
| அறவிடப்பட்ட வரி பற்றிய தகவல்களை விடயத்திற்குப் பொறுப்பான உத்தியோகத்தருக்கு அறிக்கையிட்டு நீதிமன்றத் தீர்ப்பை வழக்கு ஏட்டில் பதிவு செய்தல் | அதே தினத்தில் | வருமானப் பரிசோதகர் |
| அறவிடப்பட்ட வரி தொடர்பான தகவல்களை வியாபார வரியின் கீழ் வரும் இடங்கள் பற்றிய ஏட்டிலும் வியாபார வரி ஏட்டிலும் பதிவு செய்தல் | வருமானப் பரிசோதகரின் அறிக்கை கிடைத்த திகதி முதல் 2 நாட்களினுள் | விடயத்துக்குப் பொறுப்பான உத்தியோகத்தர் |

குறிப்பு- 1.செலுத்தப்படாத வியாபார வரியை அறவிடுவதற்காக வருமானப் பரிசோதகருக்கு நீதிமன்றத்துடன் செயற்படுவதற்கான அதிகாரங்களை ஒப்படைப்பது நகர ஆணையாளரின்/ செயலாளரின் பணியாக இருக்க வேண்டும்.

2. நீதவான் மூலம் கட்டளை வெளியிடப்பட்ட பின்பு வரியை அந்த சந்தர்ப்பத்திலேயே அறவிட்டுக்கொள்ள முடியுமான வகையில், பற்றுச்சீட்டுப் புத்தகமொன்றுடன் வேறொரு உத்தியோகத்தரை நீதிமன்றத்திற்கு அனுப்புவதற்குத் தேவையான வேலைத்திட்டத்தை நீதிமன்றப் பதிவாளருடன் கலந்துரையாடி மேற்கொள்ள வேண்டும்.

**இணைப்பு**

**சபையின் இலச்சினை**

**. . . . . . . . . . சபை**

**20 . . . ஆம் ஆண்டிற்கான வியாபார வரி அறிவித்தல்**

**எனது இலக்கம்: . . . . . . . . . . . . . . . .**

**20 . . . . . . . . . . . . . . . . . ஆந் திகதி**

**திருவாளர்/ திருமதி/ செல்வி ........................................................................................,**

**திருவாளர்/ திருமதி/ செல்வி அவர்களே,**

02. நீங்கள் நடாத்திச் செல்கின்ற இங்கே கீழே விபரிக்கப்பட்டுள்ள வியாபாரம் சம்பந்தமாக மேற்குறித்த வரி ஏற்புடையதாகும்.

வியாபாரத்தின்

(அ) பெயர்: . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . ...

(ஆ) இயல்பு: . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . .

(இ) கடந்த ஆண்டில் கிடைத்தது என மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம்: ரூ. . . . ...

03. மேற்குறித்த மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 247ஆ பிரிவின் (3) ஆவது உப பிரிவு மூலம்/ நகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 165அ பிரிவின் (3) ஆவது உப பிரிவு மூலம்/ பிரதேச சபைகள் சட்டத்தின் 150 ஆவது பிரிவின் (3) ஆவது உப பிரிவு மூலம்........................................................ சபையின் ஆணையாளர்/ செயலாளர் என்ற வகையில் எனக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம் அந்த வியாபாரம் தொடர்பான வரியின் பெறுமதியான ரூ. ................................ தொகையை 20...... ஏப்ரல் மாதம் 30 ஆந் திகதி பிற்பகல் 03.00 மணிக்கு முன்பு ....................................... சபைக்குச் செலுத்துமாறு உங்களுக்கு இத்தால் கட்டளையிடுகிறேன்.

இப்படிக்கு - உண்மையுள்ள,

. . . . . . . . . . . . . . . . .

ஆணையாளர் / செயலாளர்

. . . . . . . . . . . . . . . . சபை

QR Code